




நாடாளுமன்றத் தேர்தல் நெருங்கியுள்ள நிலையில், கழக நாடாளுமன்றத் தேர்தல் மேற்பார்வை மற்றும் ஒருங்கிணைப்புக் குழுவின் ஆலோசனைக் கூட்டங்கள் மக்களவை தொகுதி வாரியாக நடைபெற்று வருகின்றன. கள்ளக்குறிச்சி மக்களவை தொகுதிக்கான ஆலோசனைக் கூட்டம் அண்ணா அறிவாலயத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது. தொகுதி மேம்பாட்டுப் பணிகளின் தற்போதைய நிலை தொகுதி மக்களின் தேவைகள் தேர்தல் முன்னேற்பாட்டுப் பணிகள் உள்ளிட்டவை குறித்து கழக நிர்வாகிகளிடம் கழக இளைஞர் அணிச் செயலாளர் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கேட்டறிந்தார். மாவட்ட பொறுப்பு அமைச்சர் மாவட்டக் கழகச் செயலாளர்கள் சட்டமன்ற உறுப்பினர்கள் மாவட்ட ஒன்றிய பகுதி நகர பேரூர் கழக நிர்வாகிகள் மாவட்டக் கவுன்சிலர்கள் உள்ளிட்ட உள்ளாட்சிப் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.





காஞ்சிபுரத்தில் பேரறிஞர் அண்ணா அவர்களின் 55 வது நினைவு நாளையொட்டிபெரியார் தூணிலிருந்து அமைதி ஊர்வலம் புறப்பட்டு மாநகராட்சி அலுவலகத்தில் உள்ள திருவுருவச் சிலைக்கு மாவட்டக் கழகச் செயலாளர் க. சுந்தர் எம்.எல்.ஏ. மாலை அணிவித்து வணங்கினார். உடன் காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம், சட்டமன்ற உறுப்பினர் சி.வி.எம்.பி. எழிலரசன், மாநகர செயலாளர் சி.கே.வி. தமிழ்ச்செல்வன், மேயர் திருமதி மகாலட்சுமி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் எம்.எஸ். சுகுமார் உள்ளிட்ட மாநகர நிர்வாகிகள் பகுதி செயலாளர் ஒன்றியச் செயலாளர்கள் உள்ளாட்சிப் பிரதிநிதிகள் மாமன்ற உறுப்பினர்கள் வட்டச் செயலாளர்கள் மற்றும் பல கலந்து கொண்டனர்.

## தென்காசி வடக்கு மாவட்டம்

# குருவிகுளம் கிழக்கு, குருவிகுளம் மேற்கு, குருவிகுளம் வடக்கு, குருவிகுளம் தெற்கு ஆகிய ஒன்றியங்களில் அடங்கியுள்ள ஊராட்சிகள் விவரம்!

**கழக நிர்வாக வசதிக்காகவும் - கழகப் பணிகள் செவ்வனே நடைபெற்றிடவும் தென்காசி வடக்கு மாவட்டத்தில் உள்ள குருவிகுளம் கிழக்கு, குருவிகுளம் மேற்கு, குருவிகுளம் தெற்கு ஆகிய மூன்று ஒன்றியங்கள், குருவிகுளம் கிழக்கு, குருவி குளம் மேற்கு, குருவிகுளம் வடக்கு, குருவி குளம் தெற்கு ஆகிய 4 ஒன்றியக் கழகங்களாகப் பிரிக்கப்பட்டு, அவ்வாறு பிரிக்கப்பட்ட ஒன்றியத்திற்கான ஒன்றியக் கழகப் பொறுப்பாளர்கள் நியமிக்கப்படுகின்றனர்.**

**அவ்வாறு பிரிக்கப்பட்ட குருவிகுளம் கிழக்கு, குருவிகுளம் மேற்கு, குருவிகுளம் வடக்கு, குருவிகுளம் தெற்கு ஆகிய ஒன்றியங்கள் பின் வரும் ஊராட்சிகள் மற்றும் பேரூர் கொண்டதாக அமையும்.**

**குருவிகுளம் கிழக்கு ஒன்றியம்:** ஊராட்சிகள் - 1.மைப்பாறை, 2.வரகனூர், 3.முக்கூட்டுமலை, 4.இளையரசனேந்தல், 5.புளியங்குளம், 6.நக்கலமுத்தன்பட்டி, 7.சித்திரப்பட்டி, 8.பழையஅப்பனேரி, 9.அய்யனேரி, 10.வெங்கடாசலபுரம் ஆகிய 10 ஊராட்சிகள்.

**குருவிகுளம் கிழக்கு ஒன்றியம்**

**பொறுப்பாளர் : பி. குணசேகரன், பி.இ.,**
1/181, வடக்குத் தெரு,
நக்கலமுத்தன்பட்டி,
தென்காசி மாவட்டம்.

**குருவிகுளம் மேற்கு ஒன்றியம்:** ஊராட்சிகள் - 1.காரிசாத்தான், 2.கலிங்கப்பட்டி, 3.சத்திரப்பட்டி, 4.சங்குபட்டி, 5.வெள்ளாகுளம், 6.உமையத்தலைவன்பட்டி, 7.அ.கரிசல்குளம், 8.அழகாபுரி, 9.சத்திரகொண்டான், 10.பெருங்கோட்டூர் ஆகிய 10 ஊராட்சிகள் மற்றும் திருவேங்கடம் பேரூர்.

**குருவிகுளம் மேற்கு ஒன்றியம்**

**செயலாளர் : : செ.சேர்மத்துரை,**
38-பி, அக்ரகாரம் தெரு,
திருவேங்கடம் தாலுகா,
தென்காசி மாவட்டம்.

**குருவிகுளம் வடக்கு ஒன்றியம்:** ஊராட்சிகள் - 1.கே.ஆலங்குளம், 2.அத்திப்பட்டி, 3.இராமலிங்கபுரம், 4.குறிஞ்சாகுளம், 5.குளக்கட்டாக்குறிச்சி, 6.வடக்குப்பட்டி, 7.பிச்சைதலைவன்பட்டி, 8.பிள்ளையார்குளம், 9. ஜமீன்தேவர்குளம் ஆகிய 9 ஊராட்சிகள்.

**குருவிகுளம் வடக்கு ஒன்றியம்**

**செயலாளர் : ஆர். கிறிஸ்டோபர்,**
1/156, தெற்கு தெரு,
பிச்சைத்தலைவன்பட்டி,
இளையரசனேந்தல்,
தென்காசி மாவட்டம்.

**குருவிகுளம் தெற்கு ஒன்றியம்:** ஊராட்சிகள் - 1.வடக்குகுருவிகுளம், 2.தெற்குகுருவிகுளம், 3.பழங்கோட்டை, 4.நாலாந்துலா, 5.கே.கரிசல்குளம், 6.களப்பாங்குளம், 7.சாயமலை, 8.சிதம்பராபுரம், 9.செவல்குளம், 10. வாகைகுளம்.

**குருவிகுளம் தெற்கு ஒன்றியம்**

**செயலாளர் : மா. கடற்கரை**
56/8, நாடார் சாவடி தெரு,
குருவிகுளம் 627 754.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 3-2-2024

**துரைமுருகன்**
பொதுச்செயலாளர்
தி.மு.க.



வேலூர் மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் பேரறிஞர் அண்ணாவின் 55வது நினைவு நாளை முன்னிட்டு அவரது உருவப் படத்திற்கு மாவட்ட தி.மு.க. அவைத் தலைவர் தி.அ.முகமதுசகி மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். அருகில் மாநகர செயலாளர் ப.கார்த்திகேயன் எம்.எல்.ஏ., தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஆர்.பி.ஏழுமலை, மாநகராட்சி மேயர் சுஜாதா, முன்னாள் அமைச்சர் டாக்டர் வி.எஸ்.விஜய், மாவட்ட ஊராட்சிக் குழு உறுப்பினர் த.பாபு, பகுதிச் செயலாளர்க முருகபெருமாள், தயாள்ராஜ், சசிகுமார், சங்கர், வி.ஜி.கே. சுந்தரவிஜி, முனவர் பாஷா, மாவட்ட மாணவர்அணி அமைப்பாளர் பி.எம்.தேவராஜ், மாநகர இளைஞர் அணி அமைப்பாளர் யூ.ரவிக்குமார், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் வி.எம்.டி.ஏ. பாலாஜி மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# காரைக்குடியில் ரூ.100 கோடியில் புதிதாக சட்டக் கல்லூரி கட்டிடப் பணிகள்!

## அமைச்சர் எஸ். ரகுபதி தலைமை! அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் - ப.சிதம்பரம் எம்.பி. தொடங்கி வைத்தனர்!

சிவகங்கை. பிப்.4-

தமிழக முதல்வராக தளபதி ஸ்டாலின் அவர்கள் 2021ல் பொறுப்பு ஏற்றதும் முதல் சட்டமன்ற கூட்டத் தொடரில் செட்டிநாட்டில் வேளாண் கல்லூரியும் காரைக்குடியில் சட்ட கல்லூரி துவங்கப்படும் என்று அறிவித்தார்.

அதன்படி கடந்த ஓராண்டுகளாக காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழக வளாகத்தில் சட்டக் கல்லூரி செயல்பட்டு வருகிறது. வேளாண்கல்லூரி செட்டிநாட்டில் வருகிறது. புதிதாக சட்டக் கல்லூரிகட்டிடம் கட்டுவதற்கான கட்டுமான பணிகளுக்காக தமிழக முதல்வர் அவர்கள் ரூபாய் 100 கோடியே 45லட்சம் நிதியினை ஒதுக்கீடு செய்து ஆணை பிறப்பித்தார்.

அதற்கான கட்டிடப் பணிகள் துவக்க விழா நேற்று காரைக்குடி கழனிவாசல் சாலையில் சட்டத் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி தலைமையில்கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் முன்னாள் ஒன்றிய நிதி அமைச்சர் ப.சிதம்பரம் எம்.பி. ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சியில் கார்த்தி ப.சிதம்பரம் எம்.பி., சட்டமன்ற உறுப்பினர் கள்எஸ். மாங்குடி, திருமதி. தமிழரசி ரவிக்குமார், சட்டத்துறை செயலாளர் ஜான் அலெக்சாண்டர், பொதுப் பணித்துறை தலைமை பொறியாளர் சுகுமாறன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள்.

முன்னதாக சட்டக் கல்லூரி இயக்குனர் முனைவர் ஜெயலட்சுமி வரவேற்று பேசினார். சட்டக்கல்லூரி முதல்வர் ராமகிருஷ்ணன் ரஞ்சித் நன்றி கூறினார். இந்த நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் மு.தென்னவன், காரைக்குடி நகர் மன்ற தலைவர் எஸ்.முத்துதுரை, ஒன்றிய கவுன்சிலர் தேவி மீனாள், சங்கராபுரம் ஊராட்சி மன்றத் தலைவர் தேவிமாங்குடி நகர் துணைத் தலைவர் என். குணசேகரன் பேரூராட்சி மன்ற தலைவர்கள் ராதிகா, முகமது மீரா, ஒன்றியச் செயலாளர்கள் சுப.சின்னத்துரை, குன்னக்குடி சுப்பிரமணியன், கே.எஸ்.ஆனந்த், பொதுக் குழு உறுப்பினர்கள் பள்ளத்தூர் கே.எஸ்.ரவி, மதார் சேட், துணைச் செயலாளர் முத்துக்குமார், ம.தி.மு.க. மாவட்டச் செயலாளர் மனோகரன், இந்திய கம்யூனிஸ்ட் ராமச்சந்திரன், உட்பட அனைத்து கட்சி பிரதிநிதிகள் மற்றும் பலர் கலந்து கொண்டார்கள். 19.14 ஏக்கரில் ரூபாய் 100 கோடியே 45 லட்சம் மதிப்பில் புதிதாக மூன்று தளங்கள் கலையரங்கம் விடுதிகள் கொண்டதாக இந்த சட்டக் கல்லூரி அமைக்கப் பட உள்ளது. 18 மாதங்களில் பணிகளை முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

## மதுரை 'எய்ம்ஸ்'

# மருத்துவமனை கட்டுவதில் காலதாமதம் ஏன்?

## மக்களவையில் கதிர் ஆனந்த் கேள்வி!

புதுடெல்லி, பிப். 4-

தமிழ் நாட்டில் மதுரை எய்ம்ஸ் மருத்துவமனை கட்டும் பணியில் காலதாமதம் ஏன்? கட்டுமானப் பணியை விரைவுபடுத்த ஒன்றிய அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா? என்று நாடாளுமன்ற மக்களவையில் வேலூர் நாடாளுமன்ற உறுப்பினர்கதிர் ஆனந்த் கேள்வி எழுப்பியுள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் எழுப்பியுள்ள கேள்வி வருமாறு:-

தமிழ் நாட்டில் மதுரை எய்ம்ஸ் அமைக்கும் பணியை விரைவுபடுத்த மத்திய அரசு ஏதேனும் நடவடிக்கை எடுத்துள்ளதா?

அப்படியானால், அதன் விவரங்கள் மற்றும் அதிகப்படியான கால தாமதத்திற்கான காரணங்கள் யாவை?

ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனம் (JICA) வழங்கிய நிதியின் விவரங்கள் மற்றும் JICA விலிருந்து நிதி பெறுவதில் கால தாமதத்திற்கான காரணங்கள் யாவை?

(மதுரையில் எய்ம்ஸ் மருத்துவமனை கட்டுவதற்கு இதுவரை செலவழிக்கப்பட்ட நிதியின் விவரங்கள் மற்றும் மதுரை எய்ம்ஸ் கட்டப்படும் நேரம்; மற்றும் நாட்டில் பல்வேறு



இடங்களில் எய்ம்ஸ் அமைப்பதற்கு அரசு நிதி ஒதுக்கியுள்ளதா?

அப்படியானால், நாட்டின் பல்வேறு இடங்களில் எய்ம்ஸ் மருத்துவமனை கட்டுவதற்கு இதுவரை ஒதுக்கப்பட்ட / செலவிடப்பட்ட நிதி விவரங்கள், இடம்வாரியாக தெரிவிக்கவும்?

ஒன்றிய அரசின் சுகாதாரம் மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சகத்தில் ராஜாங்க அமைச்சர் டாக்டர் பாரதி பிரவின் பவார் எழுத்து பூர்வமாக அளித்த பதில் வருமாறு:-

தமிழ் நாட்டில் மதுரையில் எய்ம்ஸ் அமைப்பதற்கு, எல்லைச் சுவர் கட்டுவது உள்ளிட்ட முதலீட்டுக்கு முந்தைய நடவடிக்கைகள் முடிக்கப்பட்டுள்ளன. திட்ட மேலாண்மை ஆலோசகர் (PMC) நியமிக்கப்பட்டுள்ளார். மாஸ்டர் பிளான் இறுதி செய்யப்பட்டுள்ளது. முக்கிய சிவில் பணிக்கான தொழில்நுட்ப மற்றும் நிதி ஏலம் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. மார்ச் 26, 2021 அன்று ஜப்பான் அரசுக்கும் இந்திய அரசுக்கும் இடையே கையெழுத்தான ஒப்பந்தத்தின்படி, கடன் தொகை ஜப்பானிய யென் 22,788,000,000 மட்டுமே.

மதுரை எய்ம்ஸ் கட்டி முடிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்ட தேதி அக்டோபர், 2026 ஆகும். இந்திய அரசு திட்டத்தின் முன் முதலீட்டு நடவடிக்கைகளுக்காக ரூ.12.35 கோடி மற்றும் மதுரை எய்ம்ஸ் மருத்துவமனையின் திட்ட மேலாண்மை ஆலோசனைக்கு ரூ.6கோடி இது வரை வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாறு ஒன்றிய அமைச்சர் பதிலளித்தார்.

## கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. தலைமையில்

# தூத்துக்குடிக்கு - கழகத் தேர்தல் அறிக்கை தயாரிக்கும் குழு வருகை!

## நெல்லை கிழக்கு மாவட்டத்தினருக்கு - மாவட்டச் செயலாளர் இரா.ஆவுடையப்பன் வேண்டுகோள்!

நெல்லை, பிப்.4 -

தி.மு.க தேர்தல் அறிக்கை தயாரிக்கும் குழு கழக துணைப் பொது செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி அவர்கள் தலைமையில் நாளை (05.02.2024 திங்கட்கிழமை) காலை 10 மணிக்கு தூத்துக்குடி மாணிக்கம் திருமண மண்டபத்தில் கூடுகிறது.கழக நிர்வாகிகள்,வர்த்தகர்கள்,பல் துறை சேர்ந்த நிபுணர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டு தேர்தல் அறிக்கையில் இடம் பெற வேண்டிய கோரிக்கைகளை மனுக்களாக வழங்கலாம்.என நெல்லை கிழக்கு மாவட்ட செயலாளர் இரா.ஆவுடையப்பன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள அழைப்பு விவரம் வருமாறு.

முதலமைச்சர் கழக தலைவர் அவர்கள் நாற்பதும் நமதே நாடாளுமன்றம் நமதே என்ற இலக்கினை நோக்கி தமிழ்நாட்டில் திராவிட முன்னேற்றக் கழக தலைமையிலான இந்தியா கூட்டணி மாபெரும் எழுச்சியோடு,

முழுமையாக வெற்றிகளை குவித்திட தீவிரமாக பணியாற்றி வருகிறார்கள். வெற்றி வியூகத்தின் ஒரு பகுதியாக தமிழ்நாட்டு மக்க



ளுக்கும்,நமது மாவட்டத்திற்கும் பொது மக்களுக்கு அதிமுக்கிய தேவையான பணிகளை பட்டியலிட்டு தரும் பட்சத்தில் நமது கோரிக்கைகள் அனைத்தும் தேர்தல் அறிக்கையில் வாக்குறுதிகளாக வழங்குவதற்கு ஏதுவாக இருக்கும்.

அந்த வகையில் தலைவர் அவர்கள் எண்ணுகின்ற வழியில் நமது நெல்லை கிழக்கு மாவட்டத்தில் உள்ள கழக நிர்வாகிகள், பொதுமக்கள், விவசாயிகள், வியாபார பெருங்குடி மக்கள்,அரசு ஊழியர்கள்,ஆசிரிய பெருமக்கள், பல்வேறு துறைகளைச் சார்ந்த நிபுணர்கள், அனைத்து தரப்பு பொதுமக்கள் ஆகியோர் செய்ய வேண்டிய பணிகளை கோரிக்கைகளை, மனுவாக கொடுத்து திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தேர்தல் அறிக்கை வாக்குறுதியாக அளிப்பதற்கு ஏற்ற வண்ணம் தயார் படுத்திக் கொண்டு வருமாறு தங்களை கேட்டுக் கொள்கிறேன்.

இந்தக் குழுவானது கழக துணை பொது செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி அவர்கள் தலைமையில் தேர்தல் அறிக்கை தயாரிக்கும் குழுவினர் நாளை (05 .02.2024 திங்கள் கிழமை) காலை 10 மணிக்கு தூத்துக்குடி மாவட்டம் தூத்துக்குடி நகரில் உள்ள காமராஜர் கல்லூரிக்கு எதிர் புறம் திருச்செந்தூர் சாலையில் அமைந்துள்ள மாணிக்கம் திருமண மண்டபத்தில் வைத்து இக்குழுவானது கோரிக்கை மனுக்களை பெற்றும், பொதுமக்களிடம் கருத்து கேட்கும் நிகழ்ச்சியும் நடைபெற உள்ளது.

இந்த நிகழ்ச்சியில் நெல்லை கிழக்கு மாவட்டத்தை சார்ந்த கழக நிர்வாகிகள், பொதுமக்கள் பங்கேற்று தங்கள் பகுதியின் கோரிக்கைகளை மனுவாக கொடுத்திட வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் அழைப்பு விடுத்துள்ளார்.






திருவண்ணாமலையில் பேரறிஞர் அண்ணா அவர்களின் 55வது நினைவு நாளை முன்னிட்டு, அவரது திருவுருவச் சிலைக்கு கழக மருத்துவரணி துணைத் தலைவர் டாக்டர் எ.வ.வே.கம்பன் மாலை அணிவித்து மரியாதை செலுத்தியபோது... உடன் சி.என்.அண்ணாதுரை எம்.பி., மாநில பொறியாளர் அணி செயலாளர் கு.கருணாநிதி, எஸ்.பன்னீர்செல்வல், ப.கார்த்திவேல்மாறன், விஜயலட்சுமிரமேஷ், க.சௌந்திரராசன், மெய்யூர்.சந்திரன், த.ரமணன், பெ.கோவிந்தன், சி.மாரிமுத்து, காலேஜ் ரவி, சு.ராஜாங்கம் ஏ.ஏ.ஆறுமுகம், பாலமுரளிகிருஷ்ணா, இரா.கார்த்திகேயன், குட்டி க.புகழேந்தி மற்றும் பலர் உள்ளனர்.